**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225831

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.07.2022

Accepted: 15.09.2022

Published: 01.10.2022

Citation:
Devi, S. "Women in the Work of S. Ramakrishnan." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 2, 2022, pp. 71–76.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5831

*Corresponding Author:
devi-tam@sfrcollege.edu.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Women in the Work of S. Ramakrishnan

**Dr. S. Devi**
*Assistant Professor in Tamil*
*The Standard Fireworks Rajarathnam College for Women*
*Sivakasi*
*https://orcid.org/0000-0003-4578-4403*

**Abstract**
The life of ancient people can be known to some extent only through the lens of literature. In this way, the purpose of this article is to study the place of women in the society from time to time by using literary messages as a source and to study about the women found in S. Ra's works. Feminisms include feminine elements. Femininity and feminism are both words that include women. Love, kindness, charity and motherhood are feminine qualities. Women are responsible for human creation and creativity. Being one half of the human society, women face many hardships in life. Women endure whatever cruelty their husbands do. Women endure cruelty to save their family honor. The girl is forced to follow the instructions of the housemates. She is obliged to humbly answer their questions. To live without hearing the house noise. As it was the duty of the housewife to protect the family honor, women fulfilled it with great care. S. Ra's female mantras are good housewives who protect the family honor. Love is the foundation of life. Her husband's love gives her more pleasure than the love of others. She expects her husband to be kind to her. Although everyone shows affection towards her in Bukhunda's house, she considers her husband's love for her completely. Love refers to a variety of feelings and experiences based on emotion and mood. Love is usually a strong and positive experience. Love manifests itself in many dimensions, from simple happiness to deeply personal affection.

**Key Words:**
Novel, Criticism, Feminicism, S.Ramakrishanan

**References**

1. Ramakrishnan, S. 2005. Appetite. Chennai, Jomai Publishing House. First Edition.
2. Ramakrishnan, S, Desandhri. 2006. Vikatan Prasham, Chennai. First edition.
3. Ramakrishnan. S, 2006. Walking fountain. Jomai Publishing House, Chennai. First edition.
4. Tolkappiyam, 1998. S. V. Chennai, Subramaniam Manivasakar Offset.
5. 1992. Kriya's Modern Tamil Dictionary
6. Mr. V.K. Murugan or Beauty. 1987. Bari station. Chennai.
7. Mr. V.K. Woman's Pride, 1927. Sarada Publishing House
8. Bharatiyar Poems, Vikatan Publications
9. Poems of Bharathidasan. 1992. Poombukar Publishing House.

# எஸ்.ராமகிருஷ்ணன் படைப்பில் பெண்கள்

***முனைவர் சி. தேவி***
உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி
சிவகாசி

***ஆய்வுச்சுருக்கம்***
*இலக்கியம் என்னும் காலக்கண்ணாடியைக் கொண்டு தான் பண்டைக்கால மக்களின் வாழ்வை ஓரளவு அறியமுடிகிறது. அவ்வகையில் இலக்கியச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு காலந்தோறும் பெண்கள் சமுதாயத்தில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதை ஆய்வதோடு எஸ்.ரா.வின் படைப்புகளில் காணலாகும் பெண்கள் குறித்தும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பெண்ணியல்புகள் பெண்மைக் கூறுகளில் அடங்கும். பெண்மை, பெண்ணியல்பு இரண்டு சொற்களும் பெண்ணுக்குள் உள்ளடங்கிய சொற்களாகும். அன்பு, கருணை, தொண்டு, தாய்மை ஆகியன பெண்மைப்பண்புகளாகும். மானுடத்தோற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் பெண்களே காரணமாக இருக்கின்றனர். மானுடச் சமுதாயத்தின் ஒரு பாதியாக இருக்கும் பெண், வாழ்வில் பல அவலங்களைச் சந்திக்க நேரிடுகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *தமிழ்நாவல். விமர்சனம், பெண்ணியம். எஸ். ராமகிருஷ்ணன்*

## முன்னுரை

விலங்குகள் போல் காட்டில் திரிந்த மனிதர்கள் இயற்கையின் உந்துதலால் இணைந்து வாழத் தொடங்கினர். கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கிய காலத்தில் ஆண்மகனே குழுவின் தலைவனாக விளங்கினான். குழந்தைகளைப் பெற்றுத் தரும் நிலைமையிலேயே பெண்கள் வாழ்ந்திருந்தனர். இலக்கியம் மூலம் தான் பண்டைக்கால மக்களின் வாழ்வை ஓரளவு அறியமுடிகிறது. இலக்கியச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு காலந்தோறும் பெண்கள் சமுதாயத்தில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதை எஸ்.ராமகிருஷ்ணனின் படைப்புகள் மூலம் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## எஸ்.ரா.பார்வையில் பெண்கள்

மானுடத்தோற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் பெண்களே காரணமாக இருக்கின்றனர். மானுடச் சமுதாயத்தின் ஒரு பாதியாக இருக்கும் பெண், வாழ்வில் அவலங்களைச் சந்திக்க நேரிடுகிறது. எதிர்நிலையான ஆணினம் மட்டுமே அவளை அவலத்திற்கு உட்படுத்துவதில்லை. அவளினமும் அவளின் துன்பநிலைக்குக் காரணமாக இருப்பதை அன்று முதல் இன்று வரை காணமுடிகின்றது. பெண்களுக்கென்று சில விதிகளைச் சமுதாயம் வகுத்து வைத்திருக்கின்றது. பெண்ணென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனையின் அடிப்படையில் அதாவது மரபுவழியில் பெண் வாழ வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றாள்.

பெண்கள் மரபுவழி வாழ்க்கை வாழ்வதையே எஸ்.ரா. தனது படைப்புகளில் வலியுறுத்தியுள்ளார். மரபுவழியில் நடக்கும் பொழுது சிக்கல் எற்பட்டு வாழ்வே சிதைந்துவிடும்நிலை ஏற்படும்பொழுது பெண்கள் மரபினை மீறினால் தவறில்லை என்னும் கருத்திற்கு அவர் இடமளிக்கவில்லை. முற்போக்குச் சிந்தனையோடு பேசுபவர் என்றாலும்கூட அதீத மரபுமீறல்

என்றெல்லாம் எஸ்.ரா. படைப்புகளில் கருத்துகள் இடம்பெறவில்லை.

## மரபு வழி நிற்றல்

மரபுவழி என்பது பாரம்பரியத்தைக் குறிப்பதாகும். பண்பாட்டின் எல்லா அம்சங்களிலும் பின்பற்றப்பட்டு வருவது அல்லது பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும். என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கூறுகின்றது. பாரம்பரியமாக பெண்கள் எங்ஙனம் வாழ்ந்து வந்தார்களோ அதிலிருந்து சற்றும் மாறாது பெண்மைக்கென வகுக்கப்பட்ட கொள்கைவழியில் வாழ்பவர்கள். பெண்ணுக்குக் கணவன் எத்தகைய கொடுமைகளைச் செய்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு பெண் வாழ வேண்டும். கணவன் தனக்கு கொடுமை செய்தாலும் கணவனை விட்டுப் பிரியாமல் வாழ வேண்டும். கணவனின் தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டும். குடும்பப் பிரச்சனைகளை பிறருக்குக் கூறாமல் இருக்க வேண்டும். பெண் அன்பிற்காக ஏங்க வேண்டும். என்பதே மரபுவழிப் பெண்மை ஆகும். நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கின்ற திறன் பெற்றவள், எப்போதும் சுற்றத்தோடு வாழ விளைபவளாக, கணவன் இறந்தாலும் மறுமணம் செய்து கொள்ளாமல் குழந்தைக்காக வாழ்பவளாக மரபு வழியில் நிற்பவர்களைக் குறிப்பிடலாம்.

## கணவனின் கொடுமையினைப் பொறுத்துக் கொள்ளல்

கணவன் எப்படிப்பட்ட கொடியவனாக இருந்தாலும், அவனோடு சேர்ந்து வாழ்வது தான் மரபு என்று பெண்களுக்குக் குழந்தைப் பருவம் முதலாகக் கற்பிக்கப்பட்ட பாடமாகும். பெண்களை வீட்டிற்குள் பூட்டி வைக்கும் நிகழ்ச்சிகூட நடைமுறையில் இருந்து வந்தது. பொருளாதார நிலையிலும் கல்வியிலும் இன்று பெண்கள் முன்னேற்றம் பெற்று வருகின்றனர் என்பது உண்மையாகும். எனினும் இன்றும் ஆண்களின் கொடுமைகளுக்கு, பெண்கள் ஆளாகி வருகின்றனர் என்பதிலும் உண்மை உள்ளது. இந்த யதார்த்த நிலையினை எஸ்.ரா. படைப்புகளில் காண முடிகின்றது.

'பி. விஜயலட்சுமியின் சிகிச்சைக் குறிப்புகள்' எனும் சிறுகதையில் வரும் பெண் மாந்தர்கள் கணவன் வெறுத்தாலும் அவனுக்காக வாழ்தல் எனும் தன்மை படைத்த பெண்மணிகளாக படைக்கப்பட்டுள்ளனர்.

பீங்கான் நாரைகள் எனும் கதையில் முப்பத்தியெட்டு வருசமாக அம்மா தரையை வெறித்துப் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள். என்று அவளது பிள்ளைகள் சொல்வதன் மூலம் அந்தப்பெண்மணி எவ்வளவு பயந்த வாழ்வு வாழ்கிறாள் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

அந்தப் பெண்மணி தனது பதினேழாவது வயதில் சமையல் செய்துகொண்டு இருக்கிறாள். அப்பா பர்மாவில் வாங்கிவந்த பீங்கான் கோப்பையில் தேநீரைச் சூடாக ஊற்றித் தூக்குகின்றபோது கை தவறி கீழே போட்டுவிட்டாள் அதனால் கோப்பை உடைந்துவிட்டது. தான் தன் மனைவி மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக, தங்கள் முதல் காதலின் வெளிப்பாடாக அந்தக் கோப்பையைக் கருதினார் போல, ஆகையால் அந்தக் கோப்பை உடைந்தவுடன் அவருக்குக் கடும்கோபம் வந்தது. மனைவியின் கன்னத்தில் ஓங்கி அறைவிட்டார். அன்றிலிருந்து அம்மா தன் கணவன் தன் மீது வெறுப்பாக உள்ளார் என்று எண்ணிக் கொண்டு நடக்கலானாள். தான் கை தவறித்தான் போட்டேன் என்றும் பேச வில்லை, இப்ப என்ன ஆயிற்று என்று சிக்கலைச் சமாளிக்கும் வகையிலும் பேசவில்லை. பேச்சை அன்றே மறந்து போனவளானாள். நிமிர்ந்தும்கூட யாரையும் பார்க்க முன் வரவில்லை. கணவன் தன்னை வெறுத்தால் என்ன? நான் என் கடமைகளை, அவருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் சிறப்பாக

செய்வேன் என்று இயந்திரமான வாழ்வை வாழ்ந்து வந்தாள்.

அப்பா அடிபட்டு மருத்துவமனைக்குச் சென்றபோதுகூட அம்மா சமைப்பதை நிறுத்தவில்லை. அப்பா இறந்தபோதும் கூட அவள் அதே சமையல்கட்டில் தான் இருந்தாள். அந்தச் சமையல்கட்டின் உள்ளே தரையைப் பார்த்துக் குனிந்தபடியே அழுது கொண்டிருந்தாள். அவரது உடலை எடுத்துக் கொண்டு செல்லும் நிமிடத்தில் அவள் விடுவிடுவென முன்வாசலுக்கு வந்து அந்த உடலின் முன்பாக வந்து நின்றவளாக முதன்முறையாக தலையை நிமிர்த்திப் பார்த்து "நான்வேணும்னு பீங்கான் கோப்பையை உடைக்கலைங்க". என்று சொல்லிவிட்டு தலையைத் திரும்பவும் கவிழ்த்துக்கொண்டாள்.

அப்பாவிடம் நாற்பத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் மனதிற்குள் இருந்த அழுத்தத்தை இறக்கி வைத்து விட்டு துஷ்டி கேட்க வந்தவர்களுக்கு கடுங்காப்பி போடப்போய் விட்டாள். அவள் மனஅழுத்தத்தில் இருக்கும்போது ஏன் பயப்படுகிறாய் என்று ஆறுதல் சொல்லவோ, ஏன் என்று கேட்கமாட்டாயா? என்று அப்பாவைக் கேட்கவோ அந்த வீட்டில் யாருமில்லை. அவரவர் வாழ்வை அவர்கள் பார்த்தார்கள். கணவன் தன்னை வெறுத்தாலும் அவர் நலனைக் கருதும்; பெண்மணியாக கடைசிவரை வாழ்ந்தாள் அம்மா.

**கணவன் தரும் உடல் உள்ளக் கொடுமைகளைத் தாங்குதல்**

அன்றாட வாழ்வின் சொல்லப்படாத துக்கங்களும் தொடப்படாத தனிமைகளும் எஸ்.ராவின் கதைகளின் பாடுபொருட்கள் ஆகின்றன. இவர் பாத்திரங்கள் யாரையும் குறைகூறுவதாக, குற்றம் சாட்டுவதாக அமையவில்லை. மாறாக தனது இருள் நிறைந்த வாழ்வைக் குறித்து வருத்தத்துடன் சிந்திப்பதாக அமைகிறது.

கணவன் எத்தகைய கொடுமைகள் செய்தாலும் பெண்கள் தாங்கிக் கொள்கின்றனர். குடும்ப மானத்தைக் காப்பாற்றவே பெண்கள் கொடுமைகளைத் தாங்கிக்கொள்கின்றனர்.

"நடந்து செல்லும் நீரூற்று" எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள "மூன்று குடும்பக் கதைகள்" எனும் கதையினுள் அமைந்த "இல்லறம்" எனும் பகுதியில் இடம்பெறும் பெண் மாந்தர் இதற்கு உதாரணம் ஆகும்.

திருமணம் என்றவுடன் மணமாகிவரும் மனைவியுடன் உடல் சார்ந்து எப்படி பழகுவது என்று தயராகிவிடுகிறான் ஒரு ஆண். பாலியல் என்பது திருமணமான பெண்ணிற்கு சிறிது கஷ்டம்தான்; என்றாலும் அதை முன்பே எதிர்பார்த்து ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் அவள் வளர்வதில்லை. பாலியல் கல்வி என்று இல்லாத சமூகத்தில் பெண்கள் உடலுறவு பற்றி அறியாதவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு புதிய இடம், புதிய மனிதர்கள், புதிய பழக்கவழக்கங்கள் என்று மாறிப்போன சூழலைப் பழகுவதற்குக்கூட போதிய கால அவகாசம் வழங்குவதில்லை. புதிதாகத் திருமணமான பெண்மணி, ஆணின் ஆசைகளை தீர்க்கும் நிலையில் பல்வேறு வகையான உடல் உள்ளம் சார்ந்த சிக்கல்களைச் சந்திக்க நேர்கிறாள்.

இக்கதையில் வரும் பெண், திருமணமான இரண்டு தினங்களுக்குள் நான்கு முறை உன்னைப் பிறந்தமேனியாகப் பார்க்க விரும்புகிறேன் என்று கேட்ட கணவனிடம் மறுக்கிறாள். அவளுக்குக் கூச்சமாக இருந்தது. சற்று ஆத்திரமாகவும் இருந்தது அவளுக்கு. அவள் விருப்பத்தைப் பற்றிய

கவலையின்றி அவள் மீது இயங்கத்துவங்கினான். தேனிலவிற்காகப் பயணம் செய்தார்கள். அந்த இரயில் பெட்டியில் கூட உறவு கொள்ள விரும்பியவனைப் போல எல்லோரும் உறங்கியவுடன் நீ கழிப்பறைக்கு வந்துவிடு என்றான். சுற்றிப்பார்க்கச் சென்ற இடத்தில் அவன் பேசியதைக்கேட்டு அவளுக்கு உடம்பில் நடுக்கம் ஏற்பட்டது. மலையை விட்டுக் கீழே இறங்கிவரும் பொழுது அவள் உடல் வெளிறிப்போய் முகமெல்லாம் அசதியாக இருந்தாள். அவன் பஸ்ஸின் இன்னொரு இருக்கை இருந்த கல்லூரி மாணவியைப் பார்த்தவண்ணம் இருந்தான். அடுத்த சில நாட்களில் அவன் தனது விடுமுறை முடிந்து அலுவலகம் செல்வதற்குத் தயாரானான். சந்தோசமா வச்சிக்கிடுங்க மாப்பிள்ளை என்று சொல்லி அவளது குடும்பத்தார் அனைவரும் விடைபெற்றனர். அவளும் அனைத்துப் பெண்கள் போல அழுதாள். இனி தன் உடல் தனக்குச் சொந்தமில்லை என்று ஒத்துக்கொண்டவளைப் போல அவன் இச்சையின் போக்கில் தன்னை ஒப்படைத்துக் கொள்ளத் துவங்கினாள். அவர்களது இனிமையான இல்லற வாழ்க்கை இப்படித் தான் துவங்கியது. கணவனது கொடுமைகள் எந்த வடிவத்தில் இருந்தாலும் அதை பொறுத்துக்கொண்டு வாழும் மனநிலையில் பெண்கள் உலகமே உள்ளது எனலாம்.

### குடும்பப் பிரச்சினைகளைப் பிறருக்குக் கூறாதிருத்தல்

பெண் புகுந்த வீட்டில் உள்ளவர்களின் சொற்படி நடக்க நிர்பந்திக்கப்படுகின்றாள். அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு அடக்கத்துடன் பதில் கூறவேண்டிய கட்டாயம் அவளுக்கு உள்ளது; வீட்டுச்சத்தம் வெளியே கேட்காமல் வாழ வேண்டும். குடும்பக் கௌரவத்தைக் காப்பது இல்லத்தரசியின் கடமை என்ற காரணத்தினால் பெண்கள் மிகுந்த அக்கறையோடு நிறைவேற்றினர். குடும்பக் கௌரவம் காக்கும் நல்ல இல்லத்தரசிகளாக எஸ்.ராவின் பெண் மாந்தர்கள் திகழ்கின்றனர்.

‘பி.விஜயலட்சுமியின் சிகிச்சைக் குறிப்புகள்’ எனும் சிறுகதையில் இடம்பெறும் விஜயலட்சுமி எனும் பெண் மாந்தர்க்கு அம்மா வீட்டிற்குச் செல்ல அனுமதி மறுப்பு என்று சாதாரண விசயங்களுக்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. அவளது உரிமைகள் மறுக்கப்பட்டதோடு மட்டுமல்லாது அடித்து துன்புறுத்தப்பட்டாள். எதையும் தனது தந்தை வீட்டாருக்கோ, அக்கம்பக்கத்தாருக்கோ அவள் தெரிவிக்கவில்லை. மனத்திரிபு அடைந்து மருத்துவமனை செல்லும் அளவு துன்பம் நேர்ந்தாலும்கூட யாரிடமும் அதைப்பற்றி அவள் கூறுவதற்கு முன்வரவில்லை. இது மாதிரி பெண்கள் இன்று வரை சமூகத்தில் இருக்கிறார்கள் என்பதை எஸ்.ரா. படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

### அன்பிற்காக ஏங்குதல்

அன்புதான் வாழ்க்கைப் பிடிப்பின் அடிநாதம் ஆகும். பிறர் தன்மீது வைத்துள்ள அன்பைக் காட்டிலும் கணவனின் அன்பே அவளுக்கு இன்பத்தைத் தருவதாக அமைகின்றது. கணவன் தன்மீது அன்பாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றாள். புகுந்த வீட்டில் எல்லோரும் தன்மீது பாசம் காட்டினாலும் கணவன் தன் மீது கொண்ட அன்பினைத் தான் முழுமையாகக் கருதுகின்றாள். அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. அன்பு வலுவாகவும், நேர்மறையான அனுபவமாகவும் இருக்கிறது. எளிமையான மகிழ்ச்சி முதல் ஆழ்ந்த தனித்தன்மையான பாசம்வரை அன்பு பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. பொதுவாக அன்பு என்பது ஒரு வலுவான ஈர்ப்பு மற்றும் தனிப்பட்ட உறவுமுறை இணைப்பின் உணர்வைக் குறிக்கிறது. மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றை குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது.

தமிழ்ச்சமூகத்தில் ஆணாதிக்கம் இன்று வரை உச்சத்தில் உள்ளது. ஆணாதிக்கம் காரணமாகப் பெண்குலம் அன்பு கிட்டாது அன்பிற்காக ஏங்கும் இனமாகவே திகழ்கிறது.

"நடந்து செல்லும் நீரூற்று" எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள "மூன்று குடும்பக் கதைகள்" எனும் சிறுகதையில் உள்ள "பீங்கான் நாரைகள்" எனும் பகுதியில் வரும் அம்மா கதாப்பாத்திரம் தன் மனதிலிருக்கும் துயரத்தைக் களைவதற்கு கணவன் முயற்சிக்கவில்லை. அந்தக் குடும்பத்திலுள்ள மற்றைய உறவுகளும் முற்படவில்லை. இந்தக் காரணங்களினால் தனக்கென்று இந்த வீட்டில் யாருமில்லை என்ற எண்ணம் அவள் மனதில் பதிந்து விட்டது. யார் மரணத்திற்கும் அவள் வருந்தவில்லை. கணவன் அன்பே முற்றிலுமாக கிடைக்காதபட்சத்தில் யார் என்ன ஆனால் என்ன? என்ற மனநிலைக்கு வந்துவிட்டாள். அவள் அப்படி ஒன்றும் பெரிய தவறிழைத்து விடவில்லை. கை தவறுதல் மனித இயல்பு. அதை மன்னித்து ஏற்றுக்கொள்ள ஆண் மனம் ஒப்பவில்லை.

ஆச்சி இறந்தபோதோ, சித்தப்பா இறந்தபோதோ அம்மாவிடம் சிறிய மாற்றம்கூட ஏற்படவேயில்லை. அப்போதும் அம்மா தலைகுனிந்து கொண்டேதானிருந்தாள். வயோதிகம் முற்றி அம்மாவும், அப்பாவும் மட்டுமே அந்த வீட்டில் இருந்தார்கள். அப்போதும் கூட அம்மாவின் சமையல் வேலை ஒய்வேயில்லை. அவள் கரப்பான் பூச்சிகளோடும், ஈரத்தில் நமத்துப்போன தீக்குச்சிகளோடும் பேசிக்கொண்டிருப்பதை அப்பா கேட்டிருக்கிறார். அவருக்குச் சில சமயம் அம்மாவைப் பார்க்க பயமாகயிருக்கும். தனக்கும் வயதாகிவிட்டது என்று அவளுக்குத் தெரிந்திருக்குமா, எதற்காக இத்தனை வைராக்கியமாக இருக்கிறாள் என்று அவளைப் பார்த்தபடியே யோசித்துக் கொண்டிருப்பார். அந்தப் பெண் அன்பிற்காக ஏங்கிய மனநிலை தனக்குத்தானே பேசிக் கொள்ளுதல் என்ற தன்மை மூலம் புலனாகின்றது.

## தொகுப்புரை

எஸ். ராவின் புனைக்கதைகளில் மரபுவழி நிற்றல் என்ற தன்மையின் அடிப்படையில் கணவனின் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ளல், சகிப்புத்தன்மை, கணவன் வெறுத்தாலும் அவனுக்காக வாழ்தல், கணவன் தரும் உடல் உள்ளக் கொடுமைகளைத் தாங்குதல், அன்பிற்காக ஏங்குதல், தவறு செய்தவிடத்து மன்னிக்கும் பண்பு, நன்மை தீமைகளைப் பகுத்துணர்தல், கணவனின் மனம் போல் வாழல் போன்ற பெண்மைக் குணங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்


1. தேசாந்திரி. 2006. எஸ்.ராமகிருஷ்ணன், சென்னை, விகடன் பிரசுரம்.
2. எஸ்.ராமகிருஷ்ணன். 2006. *நடந்து செல்லும் நீரூற்று*, சென்னை, உயிர்மை பதிப்பகம்.
3. 1998. *தொல்காப்பியம்*, ச.வே.சுப்ரமணியம் மணிவாசகர் ஆப்செட் சென்னை.
4. 1992. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
5. திரு.வி.க. முருகன் அல்லது அழகு. 1987. சென்னை, பாரி நிலையம்.
6. திரு.வி.க. பெண்ணின் பெருமை. 1927. சாரதா பதிப்பகம்.
7. பாரதியார் கவிதைகள், விகடன் பிரசுரம்.
8. பாரதிதாசன் கவிதைகள். 1992. பூம்புகார் பதிப்பகம்.